

யாழ் / தென்மராட்சி உசன் தெற்கு மிருசுவிலைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி-வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை
## அவர்களின் நினைவு குறித்த 31ம் நாள்
## நினைவுச்சரம்

27.05.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

யா/ தென்மராட்சி உசன் தெற்கு மிருசுவிலைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து
27.04.2004 அன்று இறைவனடி சேர்ந்த
**திருமதி.வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை**
அவர்களின் ஆத்மா இறைவனடி சேர்ந்து
நித்தியப்பேரானந்தம் பெறுகவென
அருள்மிகு ஆலடிமுருகன்
பாதாரவிந்தங்களைப் பணிந்து அவர்தம்
பாதங்களுக்கு இம்மலரைக்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத்தெய்வம்



மறைவு 27 04 2004

தோற்றம் 14 04 1930

## அமரர்

## வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

### திதிவெண்பா

ஆண்டு தாரண அழகுநந் சித்திரை
பூண்ட ஸப்தமி திதிதனின் போயணைந்தார் ~ நீண்டபுகழ்
அன்புடைப் பெண்ணாள் வள்ளிப்பிள்ளை
ஆலடி முருகன் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டி செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா எந்தன்
அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என் செய்கேனோ

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னை போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேன்உடையாயென்னைக் கண்டுகொள்ளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக்கூத்துகந் தாயைக்
தொண்டனேன் விளம்புமா விளம்பேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்கும் மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கு
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புகழ்

திருமகளு லாவு மிருபுயமு ராரி
மிருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமரர் பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரிவுவடை யீசர்
அருள்செய்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத திருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீ ழிருக்க வென்றார்

# கந்த சஷ்டி கவசம்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மைய நடஞ்செய்யும் மயிவா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழுகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
உன்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூ தான்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறிட மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயன்குன்மம் சொக்கு சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழ்ஒளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சிததிபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவன் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலஷ்மிகளில்
வீர லஷ்மிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்ய இரு
கைய்புறத்தல் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்தி பகலாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத்தழல் மூட்டுவேன்.

வட்டிலிலும் தொட்டியிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யில் தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசி உள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மகனே என அழைத்த வாய்க்கு.

அள்ளியிடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

பனையொடு தென்னையும்
பசுங்கனி பலாவுடன் மாவும்
பயன்பல தந்திடும்
பண்பான ஊராம் உசன் பதியில்
சின்னக்குட்டியொடு கண்ணம்மா
சினமின்றி வாழ்ந்ததால்
நானிலத்தில் அவதரித்தாள்
நற்பெண்ணாள் வள்ளிப்பிள்ளை

வளர்பிறை போல் வளர்ந்தாள்
வளம்பல தான் பெற்றாள்
அறிவு தனை தான் பெற்றாள்
அகிலத்தில் வளர்ந்து நின்றாள்
வேலுப்பிள்ளை தனை
வெறுப்பின்றி கரம்பற்ற
இல்லறந் தன்னிலிவள்
இணைந்து களிப்புற்றாள்

இல்லறவாழ்வில் இவள்
இனிய நற்பிள்ளைகளை
ஈன்றெடுத்தாள் பாரினிலே
இனிமையுடன் வாழ்ந்து வந்தாள்
இன்மையான இல்லறமோ
இடையினிலே பிழைத்ததன்றோ
இனிய நற்கணவனோ
இறையடி சேர்ந்து விட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொணாத் துயரோடு
நல்லெண்ண நினைவோடு
பிள்ளைகளை வளர்ப்பதிலே
பெரும்பங்கு தான் கொண்டாள்
பெற்றவர்கள் வளர்ந்து
பெரியவர்கள் ஆனதுமே
கலியாணம் செய்துவைத்து
களிபேருவகை கொண்டாள்

பிள்ளைகள் வளர்ச்சியில்
பிரியமுடன் பாடுபட்டாள்
எண்ணற்ற உதவியினை
என்றும் செய்து வந்தாள்
கண்ணான அரிய மைந்தன்
காலன் கைபட்டதினால்
கவலை மிகக் கொண்டு
கடும் நோய்க்குள்ளானாள்

ஈர்மகளோடோர் மகனும்
இவள் வயிற்றுப்பிள்ளைகளாய்
இல்லறத்தில் இவர்கள்
இன்பமுற்று வாழ்ந்ததனைக்
கண்டு களிப்புற்று
காலமெலாம் வாழ்ந்தவள்
மகன்பிரிந்த கவலையினால்
மாறா நோய்க்குள்ளனாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயினில் இவளோ
படுத்திருந்த வேளையிலும்
பாசமிகு மகளிருவர்
பாதுகாத்து வந்த போதும்
மேனி தளர்ந்து இவள்
மேலிந்து மிகவாடி
போலி வாழ்வை முடித்து
போனாள் இறைவனடி

## மூத்தமகள் புவனேஸ்வரி நாகேந்திரம் அவர்களின் இதயக்குமுறல்

தந்தை வாழ்வுதனை தான்முடித்துக் கொண்ட பின்னர்
தளரா மனத்துடனே தரணியில் எமைக்காக்க
தன்மானம் மிக்கதொரு தாயாய் நீயிருந்து
ஆற்றிய பணிகள் என் அடிமனதில் தோன்றுதம்மா

ஆன்புடனே எனை வளர்த்து அறிவு தனை ஊட்டி
கண்ணான கணவனைக் கரம்பற்ற நீ செய்தாய்
உண்ணாமல் உறங்காமல் உதவி பல நீசெய்தாய்
உடல்சோர்ந்து இருந்தபோது உறுதுணையாய்
நானிருந்தேன்

வாழ்க்கைக்கு ஒளிசேர்த்தாய் வளம்பல நீ தந்தாய்

சோதரன் இறந்ததனால் சோர்ந்து வாடி நீ
சோகமது கொண்டு சொல்லாமல் போனதெங்கே?
உன்முகம் காணாது உள்ளமது நோகுதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மகள் நகுலேஸ்வரி தர்மகுலசிங்கம் அவர்களின் இதயக்குமுறல்

இளையவள் என்றுஎன்னில் இன்முகம் கொண்டு நீயும்
பற்பல உதவிதன்னை பாரினில் செய்துவந்தாய்
கண்மணிபோல என்னைக் கண்கலங்காமல் காத்தாய்
இல்லறவாழ்வில் என்னைஇணைத்தே இன்பமுற்றாய்

தந்தை இல்லாக்குறையை தரணிதன்னில் தீர்த்தாய்
தாயின் கடமைதனை தயங்கிடாது செய்தாய்
பங்கமதுற்ற போதும் பதிறிடாது நின்றாய்
பாரினிலே பெண்களுக்கோர் பாடமாய் நீ இருந்தாய்

நோயுற்று நீயும் நொந்து படுக்கையிலே
பக்கத்திருந்துனக்கு பணிவிடைகள் செய்து வந்தேன்
கண்களில் கண்ணீர்சொரிய கருணையோடு
என்னைப் பார்த்து
குதையொன்று சொல்லிவிடாது காலனொடு
சென்றனையோ?

## மருமக்கள்
## திரு.சி.நாகேந்திரம், திரு.சி.தர்மகுலசிங்கம் ஆகியோர் இதயக்குமுறல்

மைந்தர்கள் போல எம்மை மகிழ்வுடன் காத்த
மாண்புறு மாமியாரே மறந்து தான் போனதெங்கே
உங்களின் நினைவு எங்களின் உள்ளத்தை வாட்டுதிங்கே
மறக்கவோ முடியவில்லை உங்கள் மலர்முகம் தன்னை
இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரப்பிள்ளைகள்** குகானந்தன் தர்சிகா.

**ந.சிவலோசினி, ந.சுபாஸ்கரன், ந.தர்சிகா, த.நிரோசன், கண்ணதாசன் ஆகியோர் இதயக்குமுறல்**

அன்புடன் எனைஎடுத்து அரவணைத்து மடியில்
தலைவைத்து
அரிய நல்லுணவூட்டி அகமகிழ்ந்திருந்த
இன்றைய நாளை எம்இதயத்தில் நினைக்கும் வேளை
அழுகைதான் வருகுதெங்கள் ஆருயிர் அம்மம்மாவே

## பெறாமக்கள் இதயக்குமுறல்

பெற்றவள் போலெம்மை பேணிவளர்த்தீர்கள்
பெறாமக்கள் எம்மீது பேரன்பு மிகக் கொண்டீர்கள்
சீருடன் நாம்வாழ சிறந்தநற் சேவைசெய்து
பாரினில் தவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தீர்களோ?

## மைத்துனர் மைத்துனிமார் இதயக்குமுறல்

மனதுக்கு இசைந்த எங்கள் மாண்புறு மைத்துனியே
கலங்கரை விளக்கம்போல் காலமெல்லாம்
ஒளிதந்து
களிப்புடன் நாம் வாழ சிறந்த நற்சேவை செய்து
பிரியமாய் நாம்இருக்க பிரிந்து நீர் சென்றதேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர்கள் இதயக்குமுறல்

உற்றார் எமைக்கண்டால் உளம்மிக மகிழ்வு கொண்டு
உதவிகள் பல செய்த உத்தமியே வள்ளிப்பிள்ளை
ஊனின்றி உறக்கமின்றி உள்ளோமோ மிகவாடி
பாரினில் இன்றுநாம் படுந்துயர் கொஞ்சமல்ல?

## தேற்றம்

மண்ணில் பிறந்தோம் மாண்புறு செயல்கள் செய்தோம்
எண்ணியபடி உழைத்தோம் எண்ணிலா செல்வம்
சேர்த்தோம்
எப்படி வாழ்ந்த போதும் எம்முடல் நிலைப்பதில்லை
என்பதே உண்மை இதை என்றுமே மறக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

வேலுப்பிள்ளை
+
வள்ளிப்பிள்ளை

புவனேஸ்வரி
+
நாகேந்திரம்

↓

சிவலோசினி
சுபாஸ்கரன்
தர்சிகா
கண்ணதாசன்

திருஞானமூர்த்தி
+
லலிதா

↓

குகானந்தன்
தர்சினி

நகுலேஸ்வரி
+
தர்மகுலசிங்கம்

↓

நிறோசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எம் அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு என்றுமே நீங்காத நினைவு தந்து, எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து சென்ற எம் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு எல்லா வகையிலும் உதவிகள் புரிந்த அனைத்து உறவுகளுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோர்களுக்கும், அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும், இம்மலரை ஆக்கிய ஆசிரியருக்கும், அழகுற அச்சிட்டு உதவிய சிவகஜன் அச்சகத்தினருக்கும் எம்மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

**ஆக்கம் :-**
**சி.பவளேந்திரன் (ஆசிரியர்)**
**மீசாலை வடக்கு, கொடிகாமம்.**

சிவகஜன் ஓவ்(f)செற் பதிப்பகம் சந்தைவீதி, கொடிகாமம்.T.P.0777-273607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org